# பெண்கள் முன்னேற்றத்துக்கு உரியவற்றைத் திட்டங்களாக்கி செயல்வடிவம் கொடுப்பது, எப்போதுமே நம் 'திராவிட மாடல்' அரசுதான்!

## மகளிருக்கு ரூ.3,190 கோடி வங்கிக்கடன் இணைப்பு நிகழ்ச்சியில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மார்ச்.10-**

**சென்னையில், நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்கள், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.3,190 கோடி அளவுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், "பெண்கள் முன்னேற்றத்துக்கு உரியவற்றைத் திட்டங்களாக்கி செயல்வடிவம் கொடுப்பது, எப்போதுமே நம் திராவிட மாடல் அரசுதான்!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் கையாளுவதற்கு மகளிர் காவலர்களுக்கு திறன் பயிற்சியைத் தொடங்கி வைத்து, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்குப் பல்வேறு பயன்களை அளிக்கக் கூடிய அடையாள அட்டைகள் (ID Cards), 'அவ்வையார் விருது', `பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான மாநில விருது', 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு விருது' ஆகியவற்றை வழங்கியதுடன் ரூ.72 கோடி மதிப்பில் காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி உள்ளிட்ட இடங்களில் தோழி விடுதியைக் கட்டுவதற்கு அறிவிப்பினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இதைத்தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்திய ஒன்றியமும் போற்றிப் புகழ்கிற நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையில், நடைபெறும் மகளிருக்கான திருவிழா போன்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே இருக்கிறதும், அத்தனை சகோதரிகளுக்கும் முதலில் என் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் தினத்தை முன்னிட்டு, இங்கு பல்வேறு சாகச நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சி களை நடத்திக் காட்டிய அனைத்து மகளிருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பொருளாதாரச் சுதந்திரம்!

உங்களைப் புகழ்ந்து பேசுவதும், வாழ்த்து சொல்வதும் மட்டுமே உண்மையான மகளிர் தின கொண்டாட்டமாக இருக்காது. உங்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்வதுதான், உண்மையான மகளிர் தினக் கொண்டாட்டம். அதற்கு ஓர் சிறந்த உதாரணம்தான், இந்த நிகழ்ச்சி.

ஒருமுறை தந்தை பெரியாரிடம் பெண்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே, அவர்களுக்கு என்னென்ன உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு பெரியார், கொஞ்சம்கூட யோசிக்காமல் சொன்ன பதில், `ஒரு ஆணுக்கு என்னென்ன உரிமையெல்லாம் இருக்கிறதோ, அந்த உரிமைகள் எல்லாம் பெண்ணுக்கும் இருக்க வேண்டும் அதுதான் உண்மையான பெண்ணுரிமை' என்று தந்தை பெரியார் உணர்ந்தார்.

### திராவிட இயக்கத்தின் கொள்கை

இதுதான், நம் திராவிட இயக்கத்தின் கொள்கை. அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகம், எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் பெண்கள் முன்னேற்றத்துக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் தொடர்ந்து திட்டங்களாக்கிச் செயல்வடிவம் கொடுத்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கி வைத்தவர். 30 ஆண்டுகளுக்கு முன்பே, பெண்களுக்கு குடும்பச் சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டம் இயற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாடு காவல்துறையில் முதன்முதலாக பெண் காவலர்களை நியமித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இப்படி அவரின் சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இன்றைக்கு கலைஞர் அவர்களின் வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான திட்டங்களைப் பார்த்துப் பார்த்து செயல்படுத்தி வருகிறார். இந்த `திராவிட மாடல் அரசு', எல்லா வகையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்காக முன்னுரிமை கொடுத்துக்கொண்டு இருக்கிறது. நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அவர் இட்ட முதல் கையெழுத்தே, மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்துக்குத்தான். அடுத்து அரசுப்பள்ளியில் படிக்கின்ற மாணவிகள் உயர்கல்வியில் சேர்ந்தால், அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுக்கிற புதுமைப்பெண் திட்டத்தைச் செயல்படுத்தினார்.



### முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்

மகளிர் காலையில் எழுந்ததும் உணவு சமைத்துக் கொடுக்க சிரமப்படக் கூடாது என்று, பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார். மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள் மூலமாகத்தான், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதற்கும் நம் முதலமைச்சர் போட்ட உத்தரவுதான் காரணம். உங்கள் மூலமாக செயல்படுத்தப்படுவதால்தான் காலை உணவுத் திட்டம் மிகப் பெரிய வெற்றித் திட்டமாக, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டுத் திட்டமாக, இந்தியாவுக்கு வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது.

### 3,000 கோடி ரூபாய் வங்கிக்கடன்

எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கின்ற வகையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் மூலம், ஒரு கோடியே 15 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இந்த வரிசையில்தான், இன்றைக்கு மகளிர் தினத்தை முன்னிட்டு, உங்களுக்கு சுமார் 3,000 கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்புகளை முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்குகிறார்.

அதுமட்டுமல்ல, நம் முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டைகள் தர உள்ளார். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 1 லட்சத்து 5 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக்கடன் இணைப்புகளை, நம் திராவிட மாடல் அரசு வழங்கி இருக்கிறது. நீங்கள் உங்களின் பொருளாதாரத்துக்காக, குடும்பத்தில் இருப்பவர்களை எதிர்பார்த்து இருக்கக் கூடாது என்றுதான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

இந்த வங்கிக்கடன் இணைப்பை எல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன்தொகையாக பார்க்கவில்லை. மகளிர் சுய உதவிக்குழுச் சகோதரிகள் உங்கள் உழைப்பின் மீது, வைத்துள்ள நம்பிக்கைத் தொகையாகத்தான் நம் முதலமைச்சர் இதைப் பார்க்கிறார்.

### சகோதரியின் பாராட்டுக் கடிதம்

நேற்று முன்தினம் நான் திருவாரூர் மாவட்டத்துக்கு அரசு நிகழ்ச்சிகளுக்காக சென்றிருந்தேன். அங்கு பழவனக்குடி என்ற கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை சந்தித்துப் பேசினேன். அப்போது, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாக கிடைத்திருக்கும் பலன்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னார்கள். மேலும், சுய உதவிக் குழுக்களை எப்படிச் சிறப்பாக முன்னேற்றலாம் என்ற ஆலோசனைகளையும் அந்த சகோதரிகள் கூறினார்கள். அதுமட்டுமல்ல, சுய உதவிக் குழுவைச் சேர்ந்த சகோதரி கவிதா, தன் கைப்பட ஒரு பாராட்டுக் கடிதத்தை முதலமைச்சருக்கு எழுதி கொடுத்திருந்தார். அதில், நம் திராவிட மாடல் அரசையும், நம் முதலமைச்சரையும் பாராட்டி, அவரின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார் அந்த சகோதரி.

அதுமட்டுமல்ல, அந்தக் கூட்டத்துக்கு வந்த மகளிர் சிலர் குடியிருக்க முறையான வீடு இல்லை என்று கூறினார்கள். சிலர் வீட்டுமனைப் பட்டா இல்லை என்று என்னிடம் குறைகளைச் சொன்னார்கள். அதையெல்லாம், நம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். உடனே அந்தப் பெண்களுக்கு வீட்டுமனைப் பட்டாவுக்கான ஆணைகளையும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொள்வதற்கான ஆணைகளையும் வழங்கச் சொல்லி, நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார். அதன்படி, கோரிக்கை வைத்த 6 மணி நேரத்தில், அந்த மகளிரின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்தோம்.

### நீங்களும் ஆதரவாக இருக்க வேண்டும்!

குறிப்பாக, கோரிக்கைகளை முன் வைத்த ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று, `கலைஞர் கனவு இல்லம் மற்றும் வீட்டுமனை பட்டாக்களுக்கான ஆணைகளை' என் கைகளால் கொடுத்துவிட்டு வந்தேன். அந்த ஆணைகளை வாங்கியதும், அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏழை எளிய மகளிரின் இந்த மகிழ்ச்சிக்குப் பெயர்தான் `திராவிட மாடல் அரசு'. எனவே, நம் மகளிர் கேட்கின்ற அனைத்துத் திட்டங்களையும் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். இனி, நீங்கள் கேட்கப் போகிற திட்டங்களையும் நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார். நம் முதலமைச்சர் அவர்களும், திராவிட மாடல் அரசும், நம் துறையும், என்றென்றைக்கும் உங்களுக்கு ஆதரவாக இருப்போம். அதேமாதிரி, இந்த அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் நீங்களும் எப்போதும் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வங்கிக்கடன் இணைப்புகளைப் பெற்ற அனைத்து மகளிருக்கும், மீண்டும் என் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் – கரிகால சோழ கலையரங்கத்தில்

## சுய உதவிக் குழுக்களுக்கு - வங்கிக் கடன் இணைப்பு நலத்திட்ட உதவிகள்!

### உயர் கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

*தஞ்சை, மார்ச் 10 -*

முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் காணொலிக் காட்சி வாயிலாக உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கியதைத் தொடர்ந்து தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் கரிகால சோழ கலையரங்கத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு நலத் திட்ட உதவிகளை 08.03.2025 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். முரசொலி தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே. ஜி .நீலமேகம், மாநகராட்சி மேயர் சண் ராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், மாநகராட்சி துணை மேயர்கள் மரு. அஞ்சுகம் பூபதி, சு.ப.தமிழழகன், மகளிர் திட்டம் திட்ட இயக்குனர் திருமதி. ச.சாந்தி, உதவி திட்ட அலுவலர் மார்ட்டின் ஆரோக்கியசாமி ,தமிழ் பல்கலைக் கழகம் பதிவாளர் முனைவர். பன்னீர்செல்வம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிமுதுநிலை மண்டல மேலாளர் வெங்கடசுப்பிரமணியன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரதீப் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் கரிகால சோழ கலையரங்கத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 2266 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 178.11 கோடிவங்கி கடன் இணைப்பு நலத்திட்ட உதவிகளை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய இரண்டு திட்டங்களை தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழக அரசு 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்கத் தொடங்கியது. மகளிரின் முன்னேற்றத்திற்காக, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையில் துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளை உருவாக்கி, முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது. தற்போது மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊரகப்பகுதியில் 15568 மகளிர் சுய உதவிக் குழுக்களும் நகரப்பகுதியில் 4412 மகளிர் சுய உதவிக்குழுக்களும் ஆக கூடுதல் 19980 மகளிர் சுய உதவிக்களில் 239760 சுய உதவி குழு உறுப்பினர்கள் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டு ஊரக மற்றும் நகரப்பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடி கடன் 17762 சுய உதவிக்குழுக்ளுக்கு ரூ.1383.00 கோடி இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் தற்போது வரை 16934 சுய உதவிக்குழுக்ளுக்கு ரூ.1392.47 கோடி இலக்கீடு அடையப் பெற்றுள்ளது.

முதலமைச்சர் அவர்களால் சென்னையில் இன்று வங்கி நேரடி கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் 34073 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 408876 உறுப்பினர்களுக்கு ரூ.3190.10 கோடி வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23386 உறுப்பினர்களுக்கு ரூ.176.75 கோடி மதிப்பிலான வங்கி நேரடி கடன் குழுக்களுக்கும் மற்றும் ஊராட்சி/பகுதி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கும் பெருங்கடனும் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், 69 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி ரூ.103.5 இலட்சம் நிதியும், 219 மகளிர் சுய உதவிக் குழுக்க ளுக்கு சுழல் நிதி ரூ.32.85 இலட்சம் நிதி ஆக மொத்தம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 2266 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.178.11 கோடி நிதி ஆணையினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் வழங்கினார்.

---

### கழகத் தொகுதிப் பார்வையாளர்கள் – தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் – வாக்குச்சாவடிக் குழு (BLC) உறுப்பினர்கள் வாயிலாக

## சமூக வலை தளங்களில் இணைந்து செயலாற்றி - சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றியை உறுதி செய்வோம்!

### காணொலிக் கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உரை!

*சென்னை, மார்ச் 10 -*

வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு என்ற கழகத் தலைவர் முதலமைச்சரின் கட்டளைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தொகுதிப் பார்வையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மார்ச் 8 அன்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற காணொலிக் கூட்டத்திற்கு கழக துணை அமைப்புச் செயலாளர்ஆஸ்டின் முன்னிலை வகித்தார். தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளும் பங்கேற்ற இக்கூட்டத்தில் அணியின் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா ஆற்றிய உரை வருமாறு:-



2026 சட்டமன்றத் தேர்தலில் சமூக வலை தளத்தின் வாயிலான செயல்பாடுகள் மிகவும் முக்கியமானது. நமது கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேர்ப்பதற்கும், கழகத்திற்கு எதிரான அரசியல் எதிரிகளின் அவதூறுகளை முறியடிப்பதற்கும் சமூக வலைத் தளங்கள் வாயிலாக, குறிப்பாக தாய்மார்கள் அதிகம் கவனிக்கும் வாட்ஸ் ஆப் வாயிலாக நமது பணிகளை அதிகப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இது தொடர்பாக கழகத்தலைவர் அவர்களின் கட்டளைப்படியும், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் தொகுதிப் பார்வையாளர்கள் தங்கள் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி குழு (BLC) உறுப்பினர்கள் மூலமாக சமூக வலைத்தளங்களை சிறப்பாக பயன்படுத்த வேண்டும். இப்பணியில், தொகுதிப் பார்வையாளர்களுக்கு கழகத் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் முழுமையான உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குவார்கள்.

ஒவ்வொரு நாளும் கழகத்தின் சாதனைகளையும், அரசியல் எதிரிகளுக்கான பதிலடிகளையும் ரீல்ஸ், கார்ட்ஸ் என மக்களிடம் எளிதாகப் போய்ச் சேரும் வகையில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டு வருவதால், அவற்றை பொதுமக்களிடம் கொண்டு செல்லும் போது உண்மையான கருத்துகள் அவர்களிடம் போய்ச் சேரும். கழகத்தின் சாதனைத் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் பெற்று வரும் பலன்களை உணர்ந்து, அரசியல் எதிரிகளின் அவதூறுகளை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

இதனடிப்படையில், தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் அவரவர் தொகுதிக்குட்பட்ட கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுடன் இணைந்து, சமூக வலைத்தள செயல்பாடுகளை மேற்கொண்டு, 2026 சட்டமன்றத் தேர்தலில் வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என்ற கழகத் தலைவரின் கட்டளையை நிறைவேற்றுவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

காணொலிக்கூட்டத்தில் கழகத்தின் 234 தொகுதிப் பார்வையாளர்களும் மாநிலமாவட்டதொகுதிஒன்றியநகர தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.


**தமிழ்நாடு அரசு**

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்**

**தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1997, சட்ட எண். 19, 2018**

- தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்ற அனைத்து மருத்துவமனைகள் / நோயறிதல் மையங்கள் (Clinics) போன்றவை தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் சட்டம் 1997-ன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் இரண்டும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆயுத படைகளுக்கு சொந்தமான மற்றும் இயக்கப்படும் நிறுவனங்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- கீழ்காணும் ஆன்லைன் மூலம் மட்டுமே பதியப்பட வேண்டும். **www.tncea.dmrhs.tn.gov.in**
- பதிவு செய்யப்படாத மருத்துவ நிறுவனங்கள் மீது தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் – 1997-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
- போலி மருத்துவர்கள் தொடர்பாக புகார் அளிக்க **tncea.dmrhs@gmail.com** என்ற இணையதளம் மற்றும் 104 இலவச தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.
- W.P. (MD) NO. 20217 of 2019, நாள். 15.02.2020, W.P (MD) No. 14520/2023, நாள். 03.10.2024 நீதிமன்ற ஆணையின் படி, மருத்துவ படிப்பிற்கு கல்வி நிறுவனங்கள் முறையாக தமிழக அரசின் அனுமதி பெற்று தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.
- எனவே மாணவரின் பெற்றோர்களும் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்க வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.
- இத்தகைய கல்விகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாது என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை - 600 006.**

செ.ம.தொ.இ./234/வரைகலை/2025